Literacy for a Billion

Movie: Sivapuram
Year: 2009

Song: Priyamane
Lyricist:

பிரிய மானே
உந்தன் பிரியம் நானோ
நெருங்கி வந்தேனே
என்னை தடுத்து நிற்காதே
முரட்டு பூவை
நெஞ்சில் மடக்கி போட்ட
துடித்து தள்ளாடும்
பெண்ணின் மனம் அறிவாயோ
கண்ணிரண்டில்
குறும்புகள் மின்னுதடி
புன்னகையில்
அரும்புகள் பூத்ததடி
வானத்தில் உன் நிலவாய்
நான் உதிப்பேனோ
மார்பினில் சந்தனமாய்
நான் இழைந்தேனோ
கனிமொழி விரும்புதோ
கலந்ததோ பரவசம்
பிரிய மானே
உந்தன் பிரியம் நானோ
நெருங்கி வந்தேனே
என்னை தடுத்து நிற்காதே

வான்மழை தூறல்
மணிமுத்து கோர்த்ததாய்
சொக்கிடும் பெண்ணே
புன்னகை புரிந்தாய்
தாமரை தீண்டியே
துளைத்திடும் தென்றலாய்
தங்கும் உலாவே
தவித்தேன் அன்பால்
தேடல் தெரிந்தது யூகங்களே
தேர்தல் ஜெயித்தது மோகங்களே
அம்பு தொடுக்கையில்
இலக்குகள் மோகத்தை
அன்பினில் தைத்தவளே
அச்சத்தின் உச்சத்தில்
ஆசையின் மிச்சத்தில்
ஆல் இலை பாட்டு என்றோ
அருந்தவா விருந்தினை
அடிமை நான் (அடிமை நான்)
புதுமுகம்
பிரிய மானே
உந்தன் பிரியம் நானோ
நெருங்கி வந்தேனே
என்னை தடுத்து நிற்காதே
கனிமொழி விரும்புதோ
கலந்ததோ பரவசம்
நூபுர கங்கையில்
மதுவெல்ல பாதையில்
நாம் ஒன்று சேர்ந்தோம்
மயங்கும் நேரம்
ஆண்மகன் நெஞ்சிலே
அதிரடி கேட்டுமே
தம்புரா மீட்டும் தேவதை கைகள்
ஆசையில் அலைந்தது
சந்தங்களே
ஆடைகள் தொலைந்தது
சொர்க்கங்களே
மஞ்சம் புலம்பிட நெஞ்சம்
தளும்பிட
பண்ணும் குறும்புகளே
அன்பிலே தாயும் மாலையும்
லீலையும் பட்டு புடவையும்தான்
கனிமொழி விரும்புதோ
கலந்ததோ பரவசம்
பிரிய மானே
உந்தன் பிரியம் நானோ
நெருங்கி வந்தேனே
என்னை தடுத்து நிற்காதே

முரட்டு பூவை
நெஞ்சில் மடக்கி போட்ட
துடித்து தள்ளாடும்
பெண்ணின் மனம் அறிவாயோ
கண்ணிரண்டில்
குறும்புகள் மின்னுதடி
புன்னகையில்
அரும்புகள் பூத்ததடி
வானத்தில் உன் நிலவாய்
நான் உதிப்பேனோ
மார்பினில் சந்தனமாய்
நான் இணைந்தேனோ
கனிமொழி விரும்புதோ
கலந்ததோ பரவசம்

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*